DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, PALLADAM

Calender

Miscellaneous Case No:CC 42 of 2019

Preliminary Register

Sessions

Deposition of Witness for PW4

Name : திரு.உதயகுமார்

Age : 24

Father's/Husband's Name : செல்வராஜ்

Village : அருள்புரம்

Taluk : பல்லடம்

Occupation : பிரிண்டிங்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 05 day of December 2022

முதல் விசாரணை: நாள் : 05.12.2022

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துக்கொண்டு அச்சுத்தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 எனது அம்மா, அ.சா.2 எனது அப்பா. கடந்த 2018ம் வருடம் சுரேஷ்குமார் என்பவரிடமிருந்து நாங்கள் ரூ.5 லட்சத்திற்கு இடம் வாங்கினோம். லோன் போட்டு வீடு கட்டலாம் என்று நாங்கள் கிரைய பெற்ற இடத்தை பார்க்கும்போது எதிரிகள் இருந்துகொண்டு

எங்களது இடம் சென்று கூறினார்கள். கடந்த 27.09.2018 ம் தேதி பகல் 12.30 மணியளவில் சம்பவ இடத்திற்கு எனது அப்பா, எனது அம்மா போய்விட்டார்கள் நான் பின்னால் சென்றேன். அப்போது 1 ம் எதிரி வேலுச்சாமி இது என் இடம் வெளியே போங்க என்று எனது அம்மாவை பிடித்து தள்ளிவிட்டார். அவருடன் 2 ம் எதிரியும் இருந்தார் கெட்ட வார்த்தையால் பேசினார். எனது அம்மா கீழே விழுந்ததில் எனது அம்மாவிற்கு கை வலி உள்ளதாக கூறியதால் பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். போலீசில் எனது அம்மா புகார் அளித்தார் அதுசம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை:

சம்பவத்தன்றே போலீசார் என்னை விாசரித்தார்கள். போலீசார் விசாரணையில் எஸ்எஸ்கார்மென்ட் வேலை செய்ததாக கூறினேன் தற்போது பிரிண்டிங்கில் வேலை செய்கிறேன். போலீஸ் விசாரணையில் 1 லட்சத்திற்கு 18 ஆயிரத்திற்கு கிரையம் பெற்றதாக சொல்லியுள்ளதில் தற்போது எனது விசாரணையில் முரணாக 5 லட்சத்திற்கு கிரையம்பெற்றதாக சொல்லியுள்ளேன் என்றால் ஒரு செண்டின் விலை 1 லட்சத்து 18 ஆயிரம் ஆகும். போலீசார் விசாரணையில் மொத்த விலை ரூ1 லட்சத்திற்கு 18 ஆயிரம் என்று கூறிவிட்டு தற்போது வழக்கை மிகைப்படுத்தி 5 லட்சம் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் கிரையம் பெற்றதற்கு ஆவணத்தை காவல்நிலையத்தில் கொடுத்துள்ளோம். உண்மையில் நாங்கள் போலீசில் கொடுத்திருந்தால் இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்திருப்பார்கள் என்றும் சரியல்ல. நான் கார்மெண்ட்ஸ்ல் பணி செய்ததற்கு ஐடி கார்டு கொடுக்கவில்லை. நான் எனது அப்பா, அம்மா சென்றதற்கு பின்னிட்டு ¼ மணி நேரம் கழித்து சென்றேன். நான் சம்பவத்தின்போது அண்ணாநகர் கார்மெண்ட்ஸில் எனதுஅம்மா, அப்பா தகவல் கொடுத்தார்கள். நானும் எனது நண்பர் சிவசங்கரும் சம்பவ இடத்திற்கு வந்தோம். மேற்படி விவரத்தை போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். நான் எனது நண்பருடன் வந்த நபரத்தை

தற்போது சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது 10, 15 நபர்கள் இருந்தார்கள். சம்பவ நேரடியாக தெரியாது என்றாலும் எனது அம்மா சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்தை கைப்பற்றவேண்டுமென்றபதாக அம்மா, அப்பாவிற்கு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA

Digitally signed by K CHITHRA
Date: 2022.12.05 21:59:58 +0530

நீதித்துறை நடுவர்
பல்லடம்